OS.No. 301/2020 – 02.04.2025

DW2 – சுப்ரமணியம்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி சின்ன ராமசாமி எனக்கு மைத்துனர் என்றால் சரி. அவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விவசாயம் செய்து வருகிறார், அவருக்கு 2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண் குழந்தைகள். முதல் குழந்தை டாக்டருக்கு படித்துள்ளார். 2வது குழந்தை டாக்டருக்கு படித்து வருகிறார்.

2015ல் கிரய ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும்போதுதான் 1ம் வாதியை தெரியும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 1ம் வாதியிடம் அவருடைய குழந்தைகள் படித்து வருவதால் அதற்காக கடன் வாங்குவார் என்றால் படிப்பிற்காக வாங்கினார் என்று தெரியாது ஆனால், பணம் தேவைப்பட்டால் வாங்குவார்.

2015ல் கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்னர் அவர்களுக்குள் நடந்த வரவு செலவு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பணம் வாங்கி கொடுப்பது எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி எதற்காக எந்த தேதியில் பணம் வாங்கினார் என்றால் தெரியாது, ஆனால் கடன் வாங்குவார்.

09.11.2015ம் தேதியில் 1ம் பிரதிவாதி வகையரா 1ம் வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டதற்கு சுவாதீனம் இல்லாத விற்கிரய உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரி. 09.04.2018 தேதியில் மேற்படி பத்திரத்தை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரி. 9.4.2018 தேதியிலேயே புதிதாக ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டு அதில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரி. நான் சாட்சி கையெழுத்து செய்வதற்கு முன்னர் 1ம் பிரதிவாதி வகையராக்கள் படித்து பார்த்த பின் அதில் கையெழுத்து செய்தபிறகு நான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரி. பத்திர பதிவு அலுவலகத்திலும் 1ம் பிரதிவாதி வகையரா கையெழுத்து செய்தபிறகுதான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரி. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரி.

9.4.2018ல் விற்கிரய ஒப்பந்த பத்திரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் எழுதப்பட்டது என்றும், அதிலுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து 1 முதல் 3 பிரதிவாதிகளும் நானும் கையெழுத்து செய்தோம் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி என்னுடைய மைத்துனர் என்பதால் வாங்கிய கடனை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பந்த பத்திரத்தில் தொகை அதிகமாக போட்டிருந்தால் நாங்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் முறையீடு செய்திருப்போம் என்றால் சரியல்ல. அவர்கள் அவ்வாறு அதிகமாக போட்டு எழுதுவோம் என்று சொன்னதால் முறையீடு செய்யவில்லை. வட்டி செலுத்தி வந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. எவ்வளவு வட்டி செலுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ரூ.1,60,000/−தான் கொடுக்கப்பட்டது. எந்த தேதியில் மேற்படி பணம் கொடுக்கப்பட்டது என்றால் அது பிட் பிட்டாக கொடுக்கப்பட்டது.

9.4.2018தேதியிட்ட ஒப்பந்தப்படி ரூ.9,50,000/− தொகை போட்டு எழுதும்போது 1 முதல் 3 பிரதிவாதிகளோ அதில் சாட்சி கையெழுத்து செய்தே நானோ தொகை அதிகமாக எழுதப்பட்டுள்ளது அதனால் அதில் கையெழுத்து செய்ய மாட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை என்றால் தொகை அதிகமாக போட்டுதான் எழுதுவோம் என்று சொன்னதால் கையெழுத்து செய்தோம்.

வட்டி கொடுத்ததற்காக ரசீதோ மற்ற ஆவணங்களோ 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்குத் தெரியாது. சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்தத்தில் கண்ட தொகையை பெற்றுக்கொண்டீர்களா என்று 1 முதல் 3 பிரதிவாதிகளை சார் பதிவாளர் கேட்டாரா என்றால் கேட்டார். அப்போது கூட அதிகமாக

தொகை போடப்பட்டுள்ளது என்று நாங்கள் சொல்லவில்லை என்றால் சரி. நான் ஏற்கனவே சொன்னவாறு அதிகமாக தொகை போட்டு எழுதினால்தான் கடன் கொடுப்போம் என்று சொன்னதால் ஒப்புக்கொண்டோம். நான் 1ம் பிரதிவாதியின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதியும் வாதியின் வழக்கறிஞரும் ஆஜர் இல்லை. எனவே வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.